இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 2843-2844/2010

நசீர் முகமது ... மேல்முறையீட்டாளர்

-எதிர்-

ஜெ. கமலா மற்றும் பலர் ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் இந்திரா பானர்ஜி:

இம்மேல்முறையீடுகள், எதிர்மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான வழக்கு வளாகத்தின் சுவாதீனத்தை மீளப்பெறுவதற்கான தீர்ப்பாணையை முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் மறுத்துவிட்டபடிக்கு மே.வ. எண் 16/1998-இல் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் 17.9.1999-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை நீக்கறவு செய்தும், மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட இ.மே. (எம்.டி.) எண் 64/2000 என்ற இரண்டாம் மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்தும், ஆனால் எதிர்மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட இ.மே. (எம்.டி.) எண் 558/2000 என்ற இரண்டாம் மேல்முறையீட்டை அனுமதித்தும், 6.11.2008-ஆம் தேதியிடப்பட்ட பொது தீர்ப்புரை மற்றும் உத்தரவை எதிர்த்தும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. உரிமை வழக்கில் வாதியான எதிர்மேல்முறையீட்டாளர், வழக்கு வளாகத்தில் பாதி பகுதி தொடர்பான உரிமைமூல விளம்புகைக்கும், வழக்கு வளாகத்தில் மேற்படி பாதி பகுதியின் சுவாதீனத்தை மீளப்பெறுவதற்கும், மேலும் எதிர்மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான வழக்குச் சொத்தின் மேற்படி பாதி பகுதியிலிருந்து கிடைக்கும் வருவாயை மற்றும்/அல்லது அதனை

பயன்படுத்துவதற்கான, அனுபோகத்திற்கான மற்றும்/அல்லது குடியிருப்புக்கான கட்டணங்களை மீளப்பெறுவதற்கும் உரிமையுடையவர் என உயர் நீதிமன்றம் தீர்மானித்தது.

2. மேல்முறையீட்டாளர் வழக்கு வளாகமான, தமிழ்நாடு, ஆடுதுறை, மேல சென்னிய தெருவில் உள்ள ஆர்.எஸ். எண் 120/பி-இல் கதவு எண் 4-இல் உள்ள வளாகம் மற்றும் கட்டிடத்தின் உரிமையாளர் எனக் கோருகிறார்.

3. மேல்முறையீட்டாளரின் கூற்றுப்படி, மேல்முறையீட்டாளரின் தந்தை, 17.2.1938-ஆம் தேதியிடப்பட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம், மதிப்புடைய மறுபயனுக்காக வழக்கு வளாகத்தை வாங்கினார் என்பதாகும். மேல்முறையீட்டாளர் ஆரம்பத்திலிருந்தே உரிமையாளராக வழக்கு வளாகத்தின் சுவாதீனத்தில் இருந்துவருவதாகவும், வாடகைதாரராக அல்ல எனவும் கோருகிறார்.

4. இதில் இதற்குப்பிறகு 'எதிர்மேல்முறையீட்டாளரான வாதி' எனக் குறிப்பிடப்படும் எதிர்மேல்முறையீட்டாளர், வழக்கு வளாகத்தின் உடைமையுரிமையை விளம்புகை செய்யக் கோரியும், பிரதிவாதியான மேல்முறையீட்டாளர், எதிர்மேல்முறையீட்டாளரான வாதிக்கு வழக்கு வளாகத்தின் சுவாதீனத்தை ஒப்படைக்கப் பணித்தும், வழக்கு வளாகம் தொடர்பான வாடகை பாக்கி/குடியிருப்புக் கட்டணங்களான ரூ. 900/-ஐ செலுத்துவதற்கான தீர்ப்பாணையையும், வருங்கால ஆதாயங்களைச் செலுத்துவதற்கான தீர்ப்பாணையையும் கோரி 1994-ஆம் ஆண்டில், மு.வ. எண் 169/1994 என்ற ஓர் உரிமை வழக்கை கும்பகோணத்திலுள்ள வலங்கைமான் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

5. மேற்படி உரிமை வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையில், 17.9.1940-ஆம் தேதியிடப்பட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் எதிர்மேல்முறையீட்டாளரான வாதியின் தந்தையால் வாங்கப்பட்டதாகச் சொல்லப்படும் வளாகம், முதலில் மேல்முறையீட்டாளரின் தந்தையான எம். அப்துல் அஜீஸ்-க்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தது. எம். அப்துல் அஜீஸின் இறப்புக்குப் பிறகு, வாடகையுரிமை மேல்முறையீட்டாளரின் பெயருக்கு மாற்றிக்கொடுக்கப்பட்டு, அவர் மாதமொன்றுக்கு ரூ. 25/- வாடகையையும், உரிய பஞ்சாயத்து வரியையும் செலுத்துவதற்கு ஒப்புக்கொண்டதாகவும் சொல்லப்பட்டுள்ளது.

6. மேல்முறையீட்டாளர், நத்தம் வட்டாட்சியருக்கு 'பட்டா'வுக்கு விண்ணப்பித்து, மேற்படி வளாகத்திற்கான உரிமைமூலத்தை எடுத்துக்கொள்ள முயன்றுகொண்டிருந்தார் என்று குற்றஞ்சாட்டியும், மேலும், மேல்முறையீட்டாளர், 1994-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரையில் ரூ. 1225/- அளவுக்கு வாடகை பாக்கி வைத்திருப்பதாக குற்றஞ்சாட்டியும், எதிர்மேல்முறையீட்டாளரான வாதி, மேற்சொன்ன உரிமை வழக்கைத் தாக்கல் செய்தார்.

7. இதற்கிடையே, எதிர்மேல்முறையீட்டாளரான வாதி உரிமை வழக்கில், வாடகை பாக்கி மற்றும்/அல்லது குடியிருப்பு கட்டணங்களாக ரூ. 900/-க்கான தீர்ப்பாணை ஒன்றைக் கோரினார். எதிர்மேல்முறையீட்டாளரான வாதி, முந்தைய காலத்திற்கான வாடகை பாக்கி மற்றும்/அல்லது குடியிருப்புக் கட்டணங்கள் காலவரம்பால் தடையாகிவிட்டதாலும், மேல்முறையீட்டாளர்-பிரதிவாதியால் கட்டணங்களைச் செலுத்தும் பொறுப்பு ஏற்கப்படாததாலும், வாடகை பாக்கி மற்றும்/அல்லது குடியிருப்புக் கட்டணங்களுக்கான தனது கோரிக்கையை மூன்றாண்டுகளுக்கு வரையறுத்துக்கொண்டார்.

8. மேல்முறையீட்டாளர்-பிரதிவாதி, வழக்கு வளாகத்தில் எதிர்மேல்முறையீட்டாளரான வாதியின் உரிமைமூலம் மற்றும்/அல்லது உடைமையுரிமையினை மறுத்தும், மேல்முறையீட்டாளர்-பிரதிவாதி வாடகைதாரரல்லர் என்று வாதிட்டும் உரிமை வழக்கில் தனது எதிர் வழக்குரையைத் தாக்கல் செய்தார். மேல்முறையீட்டாளர்-பிரதிவாதி, மதிப்புடைய மறுபயனுக்காக 17.2.1938-ஆம் தேதியிடப்பட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் தனது தந்தையால் வாங்கப்பட்டதாகக் கூறப்படும் வழக்கு வளாகத்தின் முழுமையான உடைமையுரிமையினைக் கோரினார்.

9. மேலும், வழக்கு வளாகத்தின் வரி மதிப்பீடு எப்போதும் மேல்முறையீட்டாளர்-பிரதிவாதியின் தந்தையின் பெயரில்தான் செய்யப்பட்டு வந்ததாகவும், எதிர்மேல்முறையீட்டாளரான வாதி அல்லது அவரது தந்தையின் பெயரில் அல்ல என்றும் மேல்முறையீட்டாளர்-பிரதிவாதி வாதிட்டார். மேல்முறையீட்டாளர்-பிரதிவாதி, 14.3.1966-ஆம் தேதியிடப்பட்ட பதிவு செய்யப்பட்ட உடைமையுரிமை விடுப்பு ஆவணத்தின் கீழ் தனது தந்தையிடமிருந்து வழக்கு வளாகத்தினைப் பெற்றுக்கொண்டதாகக் கோரினார். மேல்முறையீட்டாளர்-பிரதிவாதியின் கூற்றுப்படி, அவர், 1966-ஆம் ஆண்டு முதல் வழக்கு வளாகத்தினை முழுமையான உரிமைகளுடன் உடைமைகொண்டு அனுபவித்து வந்துள்ளார் என்பதாகும்.

10. கற்றறிந்த மாவட்ட உரிமையியல் நீதிபதி (விசாரணை நீதிமன்றம்) மேற்படி உரிமை வழக்கில் தீர்ப்பளிப்பதற்காக பின்வரும் மூன்று எழுவினாக்களை வனைந்தார்:-

(i) எதிர்மேல்முறையீட்டாளரான வாதி, வழக்குச் சொத்தின் உரிமைமூல விளம்புகைக்கும், பிரதிவாதியிடமிருந்து (இம்மேல்முறையீட்டின் மேல்முறையீட்டாளர்) வழக்குச் சொத்தின் சுவாதீனத்தை மீளப்பெறுவதற்கும் உரிமையுடையவரா?

(ii) பிரதிவாதி (இதிலுள்ள மேல்முறையீட்டாளர்) வழக்குச் சொத்தின் வாடகைதாரரா? இல்லையா?

(iii) எதிர்மேல்முறையீட்டாளரான வாதி வேறென்ன பரிகாரத்திற்கு உரிமையுடையவர்?

11. எதிர்மேல்முறையீட்டாளரான வாதி, வழக்குச் சொத்து தனது தந்தையால் வாங்கப்பட்டது என்பதை நிரூபிக்கத் தவறிவிட்டார் என்று 22.1.1998-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை மூலம் தீர்மானித்து, மேற்படி உரிமை வழக்கை விசாரணை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. அனைத்து மூன்று எழுவினாக்களும் எதிர்மேல்முறையீட்டாளரான வாதிக்கு எதிராகத் தீர்வு செய்யப்பட்டன.

12. மேல்முறையீட்டாளர் மேற்படி வளாகத்தில் வாடகைதாரராயிருந்தார் என்று நிலைநாட்ட வாடகை ஒப்பந்தம், வாடகை இரசீதுகள் அல்லது வேறு பிற வாய்மொழி அல்லது ஆவணச் சான்று எதனையும் முன்னிலைப்படுத்தவில்லை என விசாரணை நீதிமன்றம் கண்டறிந்தது. எதிர்மேல்முறையீட்டாளரான வாதி, மேற்படி உரிமை வழக்கில் பரிகாரம் ஏதும் பெற உரிமையுடையவரல்லர் என விசாரணை நீதிமன்றம் தீர்மானித்தது.

13. விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட 22.1.1998-ஆம் தேதியிடப்பட்ட மேற்படி தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை மூலம் மனக்குறையுற்று,

எதிர்மேல்முறையீட்டாளரான வாதி, கும்பகோணத்திலுள்ள சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையிட்டார். இதில் இதற்குப்பிறகு 'முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம்' எனக் குறிப்பிடப்படும்.

14. எதிர்மேல்முறையீட்டாளரான வாதி, வழக்கு வளாகத்தின் பாதி பகுதி மீது உரிமைமூல விளம்புகைக்கும், மேலும் எதிர்மேல்முறையீட்டாளரான வாதியால் உடைமை கொண்டிருக்கும் வழக்கு வளாகத்தினைப் பயன்படுத்துவதற்கான, கையுடைமை கொண்டதற்கான மற்றும்/அல்லது அனுபோகத்திற்கான கட்டணங்கள் மற்றும்/அல்லது மேற்படி பாதி பகுதியிலிருந்து வருவாய் ஏதும் கிடைக்குமாயின் அதனை மீளப்பெறுவதற்கும் உரிமையானவரேயன்றி, சுவாதீனத்தை மீளப்பெறுவதற்கல்ல என்று தீர்மானித்து, விசாரணை நீதிமன்றத்தின் 22.1.1998-ஆம் தேதியிடப்பட்ட மேற்படி தீர்ப்புரை மற்றும் உத்தரவை நீக்கறவு செய்து 17.9.1999-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவு மூலம், முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் மேற்படி மேல்முறையீட்டை அனுமதித்தது.

15. நீதிமன்ற ஏலத்தில் வழக்கு வளாகத்தை வாங்கியவரான இராஜகோபால பட்டர் என்பவர், 1940-ஆம் ஆண்டில் எதிர்மேல்முறையீட்டாளரான வாதியின் தந்தைக்கு மேற்படி வளாகத்தினை விற்றுவிட்டார் என்ற உறுதிக்கூற்றின்பேரில்தான், உரிமை வழக்கின் எதிர்மேல்முறையீட்டாளரான வாதியின் கோரிக்கை அடிப்படையாய் அமைந்தது.

16. முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம், தரப்பினர்களின் சார்பாக அளிக்கப்பட்ட வாய்மொழிச் சான்றினைப் பகுப்பாய்வு செய்து, பதிவுரு ஆவணச் சான்றினை குறிப்பாக எதிர்மேல்முறையீட்டாளரான வாதியின் தந்தை வழக்கு வளாகத்தில் தனது

பகுதியை இராஜகோபால பட்டர் என்பவரிடமிருந்து பதிவு செய்யப்பட்ட உடைமை மாற்ற ஆவணம் (வா.சா.ஆ.1) மூலம் வாங்கிய அந்த ஆவணம் உட்பட, இராஜகோபால பட்டர், நீதிமன்ற ஏலத்தில் வழக்கு வளாகத்தினைப் பெற்ற அந்தப் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களையும் (வா.சா.ஆ.2 மற்றும் ஆ.3) மேல்முறையீட்டாளர்-பிரதிவாதியின் தந்தையான எம். அப்துல் அஜீஸ், வழக்கு வளாகத்தில் தனது பகுதியை 17.2.1938 அன்று நிறைவேற்றப்பட்ட சான்றாவணம் பி.1 என்ற பதிவு செய்யப்பட்ட உடைமை மாற்ற ஆவணம் மூலம் வாங்கியிருந்ததையும் நுண்ணாய்வு செய்து, ஆராய்ந்து, மேல்முறையீட்டாளர்-பிரதிவாதியின் தந்தையார் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர்-வாதியின் தந்தையார் மற்றும்/அல்லது அவர்களின் உரிமை முன்னவர்கள் ஆகியோரின் உரிய விற்பனையாளர்களுக்குள்ள உரிமைகளையும் ஆராய்ந்து, மேல்முறையீட்டாளர்-பிரதிவாதியின் தந்தையார், வழக்கு வளாகத்தின் ஒரு பகுதியை மட்டுமே வாங்கியிருந்தார் என்றும், மொத்த வழக்கு வளாகத்தினையும் அல்ல என்றும், அதன் மற்றொரு பகுதி, எதிர்மேல்முறையீட்டாளர்-வாதியின் தந்தையாரால் வாங்கப்பட்டது என்றும் முடிவுசெய்தது. ஆகவே, எதிர்மேல்முறையீட்டாளர்-வாதி, அவரது தந்தையாரால் வாங்கப்பட்ட வழக்கு வளாகத்தின் மேற்படி பகுதி தொடர்பான விளம்புகைக்கு உரிமையானவர் என்று முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்தது.

17. மேல்முறையீட்டாளர்-பிரதிவாதியின் குடும்பம், வழக்குச் சொத்தில் 1940-ஆம் ஆண்டு முதல் வசித்துக்கொண்டிருந்தனர் என்பதையும், எதிர்மேல்முறையீட்டாளர்-வாதியோ அல்லது அவரது தந்தையோ அல்லது வேறேதேனும் குடும்ப உறுப்பினரோ, வழக்கு வளாகம் தொடர்பான வரி எதனையும் எப்போதாவது செலுத்தியிருந்தனர் என்பதைக் காண்பிக்க வழக்கு வளாகம் தொடர்பான வாடகை ஒப்பந்தமோ அல்லது

இரசீதுகளோ அல்லது வரி இரசீதுகள் எவற்றையும் எதிர்மேல்முறையீட்டாளர்-வாதி தாக்கல் செய்யவில்லை என்னும் பொருண்மையையும் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் குறித்துக்கொண்டது.

18. மேற்படி வளாகம், மேல்முறையீட்டாளர்-பிரதிவாதியின் தந்தையாரான எம். அப்துல் அஜீஸ்-க்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தது என்று நிலைநாட்ட எதிர்மேல்முறையீட்டாளர்-வாதி தவறிவிட்டார் என்ற விசாரணை நீதிமன்றத்தின் காண்முடிவுடன் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் உடன்பட்டது. அதற்குமாறாக, மேல்முறையீட்டாளர் வழக்கு வளாகத்தின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் நீண்ட காலமாக இருந்துவந்தார். இவ்வாறாக, எதிர்மேல்முறையீட்டாளர்-வாதி உரிமையாளராய் இருந்துவந்த வழக்குச் சொத்தின் பகுதி தொடர்பான "முந்தைய கால வருவாய்"-ஐ மேல்முறையீட்டாளர் செலுத்துவதற்குரியவராவார் என முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் கண்டறிந்தது.

19. எதிர்மேல்முறையீட்டாளர்-வாதியால் உடைமை கொள்ளப்பட்டிருக்கும் வழக்கு வளாகத்தின் மேற்படி பகுதியிலிருந்து வருவாய் ஏதும் கிடைக்குமாயின், அதனை மேல்முறையீட்டாளர் உரிமை மாற்றிக் கொடுக்கவும் மற்றும்/அல்லது எதிர்மேல்முறையீட்டாளர்-வாதியால் உடைமை கொண்டிருக்கும் வழக்கு வளாகத்தின் பகுதியை பயன்படுத்துதல், கையுடைமை மற்றும் அனுபவித்து வருதல் ஆகியவற்றிற்கான கட்டணங்களைச் செலுத்துவதற்கும் உரியவராவார் என்ற அளவில் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்தது.

20. ஆயினும், எதிர்மேல்முறையீட்டாளர்-வாதி, மேல்முறையீட்டாளர்-பிரதிவாதிக்கு இடையேயான உரிமையாளர்-வாடகைதாரர் என்ற உறவுமுறையை நிலைநாட்ட எதிர்மேல்முறையீட்டாளர்-வாதி தவறிவிட்டதால், எதிர்மேல்முறையீட்டாளர்-வாதி

சுவாதீனத்தை மீளப்பெற உரிமையானவரல்லர் என்றும், எவ்வாறாயினும், மேல்முறையீட்டாளர் வழக்கு வளாகத்தின் சுவாதீனத்தில் நீண்டகாலமாக இருந்துவந்தார் என்றும் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்தது.

21. எதிர்மேல்முறையீட்டாளர்-வாதி, மேற்படி வளாகத்தின் ஒரு பகுதியின் உரிமையாளராயிருப்பதால், அவரால் உடைமை கொள்ளப்பட்டிருக்கும் வழக்குச் சொத்தின் மேற்படி பகுதி தொடர்பான உரிமைமூல விளம்புகைக்கு உரிமையுடையவராவாரேயன்றி, இதிலுள்ள மேல்முறையீட்டாளரான பிரதிவாதி நீண்ட காலமாக வழக்குச் சொத்தை அனுபவித்து வந்திருந்ததால் சுவாதீனத்தை மீளப்பெறுவதற்கல்ல எனத் தீர்மானித்து முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் நியாயமானதும், நேர்மையானதுமான ஓர் உத்தரவைப் பிறப்பித்தது. சுவாதீன மீளப்பெறுதல் பரிகாரம் காலதாமதத்தால் அதாவது காலவரையறை சட்டங்களால் தடைசெய்யப்பட்டது என்னும் அடிப்படைக் கூறை முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் கண்டறிந்தது என்றாலும், இது முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புரை மற்றும் உத்தரவில் தெளிவுபட கூறப்பட்டிருக்கவில்லை.

22. மேற்படி உரிமை வழக்கைத் தள்ளுபடி செய்து, விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை எதிர்மறையாக்கியதால் மனக்குறையுற்றதாகத் தெரிவித்துள்ள மேல்முறையீட்டாளர்-பிரதிவாதி, முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புரைக்கெதிராக மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில் இ.மே. எண் *64/2000* என்ற இரண்டாம் மேல்முறையீட்டைத் தாக்கல் செய்தார். எதிர்மேல்முறையீட்டாளர்-வாதி வழக்கு வளாகத்தில் தனது அரை பங்கு தொடர்பான சுவாதீன ஒப்படைப்பு பரிகாரத்தை மறுத்துவிட்டதாக, *17.9.1999*-ஆம் தேதியிடப்பட்ட அதே தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில்

இரண்டாம் மேல்முறையீடு எண் 558/2000-ஐ எதிர்மேல்முறையீட்டாளர்-வாதியும் தாக்கல் செய்தார்.

23. இந்நீதிமன்றம் முன்பான மேல்முறையீட்டின் கீழ் உயர் நீதிமன்ற தீர்ப்புரை மற்றும் உத்தரவின் மூலம், மேல்முறையீட்டாளர்-பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட இரண்டாம் மேல்முறையீடு எண் 64/2000 தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது, எதிர்மேல்முறையீட்டாளர்-வாதியால் தாக்கல் செய்யப்பட்ட இரண்டாம் மேல்முறையீடு எண் 559/2000 அனுமதிக்கப்பட்டுள்ளது, எதிர்மேல்முறையீட்டாளர்-வாதி, வழக்கு வளாகத்தின் அரை பகுதி தொடர்பான சுவாதீன மீளப்பெறுதல் பரிகாரத்தை மறுத்துவிட்டார் என்பதாக முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம், தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை நீக்கறவு செய்தது. தீர்ப்பாணை நிறைவேற்றும் சமயத்தில் வழக்குரைஞர் ஆணையரின் உதவியுடன் வழக்குரை அட்டவணைச் சொத்தினை அடையாளங்கண்ட பிறகு, அதன் அரை பகுதியினை மீளப்பெறுவதற்கு எதிர்மேல்முறையீட்டாளர்-வாதி உரிமையுடையவர் என உயர் நீதிமன்றம் தீர்மானித்தது. மற்ற அனைத்து விடயங்களைப் பொறுத்தவரையில், முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பாணை உறுதிசெய்யப்பட்டது.

24. உரிமையியல் விசாரணைமுறைச் சட்டம் (உ.வி.மு.ச.), பிரிவு 100, இரண்டாம் மேல்முறையீடு குறித்து வகைசெய்கிறது, 1.2.1977 முதல் நடைமுறைக்கு வந்த உரிமையியல் விசாரணைமுறைச் சட்டம் (திருத்தச் சட்டம்), 104/1976-ஆல் திருத்தப்பட்டவாறு, பின்வருமாறு வகைசெய்யப்பட்டுள்ளது:

> "100. **இரண்டாம் மேல்முறையீடு.** - (1) இச்சட்டத்தின் முக்கியப் பகுதியில் அல்லது அவ்வப்போது அமலிலிருக்கும் வேறு சட்டம்

எதனாலும் வெளிப்படையாக வேறுவிதமாக வகை செய்யப்பட்டிருக்கிறவாறல்லாமல், வழக்கில் முக்கியமான சட்ட எழுவினா ஒன்று அடங்கியிருக்கிறது என்று உயர் நீதிமன்றம் திருப்திகொண்டால், உயர் நீதிமன்றத்திற்கு கீழமை நீதிமன்றம் எதனாலும் மேல்முறையீட்டில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை ஒவ்வொன்றின் மீதும் உயர் நீதிமன்றத்திற்கு ஒரு மேல்முறையீடு உண்டு.

(2) எதிர்த்தரப்பினர் இன்றி பிறப்பிக்கப்பட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாணை ஒன்றின் மீது இப்பிரிவின்படி மேல்முறையீடு செய்யலாம்.

(3) இப்பிரிவின்படியான மேல்முறையீட்டில், மேல்முறையீட்டு விவரக் குறிப்பானது, மேல்முறையீட்டில் அடங்கியுள்ள முக்கியமான சட்ட எழுவினாவைத் துல்லியமாக உரைத்தல்வேண்டும்.

(4) எந்த வழக்கிலும் ஒரு முக்கியமான எழுவினா உள்ளடங்கியிருப்பதாக உயர் நீதிமன்றம் திருப்திக்கொள்ளுமிடத்து, அது அவ்வெழுவினாவை முறைப்படுத்திக் கூறுதல்வேண்டும்.

(5) அவ்வாறு முறைப்படுத்திக் கூறப்பட்ட எழுவினாவின்பேரில் மேல்முறையீடு கேட்கப்படுதல்வேண்டும் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர், மேல்முறையீடு கேட்கப்படும்போது, வழக்கில் அத்தகைய எழுவினா உள்ளடங்கியில்லை என்று வாதாட அனுமதிக்கப்படுதல்வேண்டும்:

வரம்புரையாக நீதிமன்றத்தால் முறைப்படுத்திக் கூறப்படாத வேறு எந்த முக்கியமான சட்ட எழுவினாவைப் பொறுத்தும், அத்தகைய எழுவினா வழக்கில் உள்ளடங்கியிருக்கிறது என்று அது திருப்திக்கொண்டால், பதிவு செய்யப்படவேண்டிய காரணங்களுக்காக மேல்முறையீட்டைக் கேட்பதற்கு நீதிமன்றத்திற்கு உள்ள அதிகாரத்தை இந்த உட்பிரிவிலுள்ள எதுவும் நீக்கிவிடுவதாகவோ, சுருக்குவதாகவோ கொள்ளப்படுதலாகாது."

25. ஓர் இரண்டாம் மேல்முறையீடு அல்லது அவ்விடயத்திற்கான மேல்முறையீடு எதுவும் உரிமைசார்ந்த விடயமல்ல. மேல்முறையீடு உரிமை என்பது சட்டத்தால் அளிக்கப்படுவதாகும். இரண்டாம் மேல்முறையீடு என்பது முக்கியமான சட்ட எழுவினா மீதே அமையும். சட்டம், வரையறுக்கப்பட்ட மேல்முறையீட்டு உரிமையை அளிக்குமானால், நீதிமன்றம் மேல்முறையீட்டு வாய்ப்பினை விரிவுப்படுத்த இயலாது. எதிர்மேல்முறையீட்டாளர்-வாதி, பொருண்மைகளை மீண்டும் விவாதிக்கவோ அல்லது ஓர் இரண்டாம் மேல்முறையீட்டில் சான்றினை மறுஆய்வு செய்யவோ அல்லது மறுமதிப்பீடு செய்யவோ உயர் நீதிமன்றத்தைக் கோர வாய்ப்பில்லை.

26. உ.வி.மு.ச., பிரிவு 100, திருத்தப்பட்டவாறு, முக்கியமான சட்ட எழுவினா ஒன்று உள்ளடங்கியிருக்கும் அவ்வழக்குகளுக்கு மட்டுமே, இரண்டாம் மேல்முறையீட்டு உரிமையை வரையறுக்கிறது. "முக்கியமான சட்ட எழுவினா" இருப்பது என்பது, உ.வி.மு.ச., பிரிவு 100-இன் கீழ் அதிகாரவரம்பைச் செலுத்துவதற்கான இன்றியமையாத் தகுதிக்கூறாகும்.

27. உயர் நீதிமன்றம், பின்வரும் சட்ட எழுவினாக்களை வனைந்தது:-

"1. கீழமை மேல்முறையீட்டு நீதிமன்றம் குறிப்பாக, சுவாதீன ஒப்படைப்பு வரையில் இடைக்கால வருமான பரிகாரத்தை வழங்கியபோது, சுவாதீனப் பரிகாரத்தை கீழமை மேல்முறையீட்டு நீதிமன்றம் மறுத்தது சரியா?

2. தற்போதைய வழக்கில் வாதுரைகளையும், உரிமைமூல ஆவணங்களையும் புறந்தள்ளி, வழக்குச் சொத்தில் பாதிப் பகுதி தொடர்பான விளம்புகைக்கு வாதி உரிமையானவர் என்று கீழமை மேல்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்தது சரியா?"

28. இரண்டாம் மேல்முறையீடு எண் 64/2000-இல் உயர் நீதிமன்றத் தலையீட்டைக் கோர, இரண்டாம் மேல்முறையீடுகள் எவற்றிலும் முக்கியமான சட்ட எழுவினா எதுவும் குறைந்தபட்சம் சட்ட எழுவினா எதுவும் உள்ளடங்கியில்லை என்று மேல்முறையீட்டாளர்-பிரதிவாதி சார்பாக கடுமையாகவும் எங்களது கருத்துப்படி குறிப்பிடத்தக்க வலிமையுடனும் வாதிடப்பட்டுள்ளது.

29. எப்பொழுது ஒரு சட்ட எழுவினா முக்கியமான சட்ட எழுவினா ஆகிறது என்பதைத் தீர்மானிப்பதற்கான கோட்பாடுகள், **சர் சுனிலால் - எதிர்- மேத்தா & சன்ஸ் லிமிடெட் -எதிர்- செஞ்சுரி ஸ்பின்னிங் & மேனுபேக்சரிங் கம்பெனி லிமிடெட்**[1]-இல் இந்நீதிமன்ற அரசமைப்பு அமர்வால் குறிப்பிடப்பட்டுள்ளன, அதில் இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாவது:-

---

1. ஏ.ஐ.ஆர். 1962 எஸ்.சி. 1314

"ஒரு வழக்கில் எழுப்பப்படும் சட்ட எழுவினா முக்கியமானதா? என்பதைத் தீர்மானிப்பதற்கான முறையான ஆய்வு என்பது எங்களுடைய கருத்துப்படி, இது பொதுமக்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததா? அல்லது இது தரப்பினர்களின் உரிமைகளை நேரடியாக கணிசமான அளவில் பாதிக்கிறதா? அப்படியெனில், இது இறுதியாக இந்த நீதிமன்றத்தாலோ அல்லது இங்கிலாந்து அரசப் பேரவையாலோ அல்லது கூட்டரசு அமைப்பு நீதிமன்றத்தாலோ அறுதியிடப்படவில்லை அல்லது சிரமத்திலிருந்து விடுவிக்கவில்லை அல்லது மாற்றுக் கருத்துக்களுக்கான விவாதத்தினைக் கோரவில்லை என்ற பொருள்வகையிலான வெளிப்படையான எழுவினாவா? அவ்வெழுவினா உச்ச நீதிமன்றத்தால் தீர்வு செய்யப்பட்டாலோ அல்லது அவ்வெழுவினாவைத் தீர்மானிப்பதற்கு பயன்படுத்தப்படவேண்டிய பொதுவான கோட்பாடுகள் நன்கு அறுதியிடபட்டிருந்தாலோ அல்லது அக்கோட்பாடுகளைப் பயன்படுத்துகின்ற சாதாரண வினா உள்ளதென்றாலோ அல்லது எழுப்பப்பட்ட கோரிக்கை பொருளற்றதென தெளிவாக தெரிந்தாலோ, அவ்வெழுவினா முக்கியமான சட்ட எழுவினாவாக இராது."

30. **உறீரோ விநோத் -எதிர்- சேஷம்மாள்**[2] என்ற வழக்கில், இந்நீதிமன்றம், (மேற்கண்ட) **சுனிலால் -எதிர்- மெஉற்தா அண்டு சன்ஸ்** என்ற வழக்கினையும், பிற

2. (2006) 5 எஸ்.சி.சி. 545

தீர்ப்புரைகளையும் சார்ந்துநின்று, குறிப்பிடப்பட்டுள்ள சட்ட எழுவினாக்களின் தொகுதி சாதாரண சட்ட எழுவினாக்களா? அல்லது முக்கியமான சட்ட எழுவினாக்களா? என்பதைக் கண்டறியும் ஆய்வுகள் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

31. (மேற்கண்ட) **உறீரோ விநோத்** என்கிற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தொடர்புடைய பத்திகள் இதன் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

> "21. "முக்கியமான சட்ட எழுவினா" என்ற சொற்றொடர், திருத்தப்பட்ட உ.வி.மு.ச., பிரிவு 100-இல் உள்ளவாறு, சட்டத்தில் வரையறுக்கப்படவில்லை. "சட்ட எழுவினா" என்ற பண்பினையுடைய முக்கியமான என்ற சொல், சாரமான, இன்றியமையாத, உண்மையான, சீரிய தகுதியுடைய, முக்கியமானது அல்லது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதாகப் பொருள்படுகிறது. இது நுட்பமானது என்பதுடன் வேறுபடும்வகையில் வெறும் சாரமற்றதாகவோ அல்லது பயனற்றதாகவோ அல்லது செயல் சாராததாகவோ ஏதோவொன்றாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. இருப்பினும், சட்டத்தின் பிரிவு 109 அல்லது அரசமைப்பின் வகுமுறைக்கூறு 133(1)(அ) போன்ற வேறு பல வகையங்களில் செய்யப்பட்டுள்ளவாறு "பொது முக்கியத்துவம் வாய்ந்த" என்ற சொற்களைப் பின்னிணைத்து "முக்கியமான சட்ட எழுவினா" என்ற வரம்பின் தன்மையைப் பெறாதவண்ணம் இருக்கவே சட்டமன்றம் விரும்பியுள்ளது என்பது தெளிவு. ஓர் இரண்டாம் மேல்முறையீட்டின்பேரிலான முக்கியமான சட்ட எழுவினா, பொதுவாக

முக்கியத்துவம் வாய்ந்த முக்கியமான சட்ட எழுவினாவாகக் கேட்கப்படவேண்டிய அவசியமில்லை. குரன் தித்தா -எதிர்- இராம் தித்தா [*(1927-28) 515* ஐ.ஏ. *235* : ஏ.ஐ.ஆர். *1928* பி.சி. *172*] என்ற வழக்கில், முக்கியமான சட்ட எழுவினா என்ற சொற்றொடர், அப்போதிருந்த உ.வி.மு.ச., பிரிவு *100* (*1973*-ஆம் ஆண்டு முதற்கொண்டு திருத்தச் சட்டத்தால் நீக்கப்பட்டது)-இன் கடைசிக் கூறில் பயன்படுத்தப்பட்டவாறு, பரிசீலனைக்காக வந்தது மற்றும் இது பொதுவாக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சட்ட எழுவினா என பொருள்படவில்லையென்றாலும் இவ்வழக்கில் அடங்கியுள்ள முக்கியமான சட்ட எழுவினாவாகும் என அந்த நீதியரசர்கள் தீர்மானித்தனர். சர் சுனிலால் வழக்கில் [*1962* சப்ளி *(3)* எஸ்.சி.ஆர். *549* : ஏ.ஐ.ஆர். *1962* எஸ்.சி. *1314*], மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் முழு அமர்வால், ரிமலாபுடி சுப்பா ராவ் -எதிர்- நூனி வீராஜு [ஏ.ஐ.ஆர். *1951* மெட்ராஸ் *969* : *(1951) 2* எம்.எல்.ஜெ. *222* (எப்.பி.)] : (சர் சுனிலால் வழக்கு [*1962* சப்ளி *(3)* எஸ்.சி.ஆர். *549* : ஏ.ஐ.ஆர். *1962* எஸ்.சி. *1314*], எஸ்.சி.ஆர். பக்கம் *557)*

"ஒரு சட்ட எழுவினா நேர்மையாக விவாதிக்கத்தக்கது எனும்போதும், அதன்பேரில் கருத்து வேறுபாட்டிற்கான வாய்ப்பிருக்குமிடத்தும் அல்லது அவ்வினாவை குறிப்பிட்டளவில்

விரிவாக விவாதிப்பது அவசியமென நீதிமன்றம் எண்ணி மாற்றுக் கருத்துகளை விவாதிக்குமிடத்தும், அவ்வெழுவினா முக்கியமான சட்ட எழுவினாவாகிறது. அதற்குமாறாக, அவ்வெழுவினா நடைமுறையில் உச்ச நீதிமன்றத்தின் தீர்முடிவால் உள்ளடக்கப்பட்டிருந்தாலோ அல்லது அவ்வெழுவினாவைத் தீர்மானிப்பதில் பயன்படுத்தப்படவேண்டிய பொது கோட்பாடுகள் நன்கு அறுதியிடப்பட்டிருந்தாலோ, மேலும் ஒரு வழக்கின் குறிப்பிட்ட சங்கதிக்கு அக்கோட்பாடுகளைப் பயன்படுத்தும் எழுவினாவாக மட்டும் இருந்தாலோ, அது முக்கியமான சட்ட எழுவினாவாக இருக்காது."

32. ஒரு சட்ட எழுவினா "முக்கியமானதாக" இருக்கவேண்டுமென்றால், அது விவாதிக்கத்தக்கதாக இருக்கவேண்டும், முன்னதாக ஒரு நாட்டின் சட்டத்தால் அறுதியிடப்படாமலோ அல்லது முன் தீர்ப்பு எதனாலும் கட்டுப்படுத்தப்படாமலோ இருக்கவேண்டும், மேலும் அது எவ்விதத்திலும் பதிலளிக்கப்படவேண்டுமென்றால் அதன் முன்பாக உள்ள வழக்கின் தீர்முடிவின்பேரில் மற்றும்/அல்லது தரப்பினர்களின் உரிமைகளின்பேரில் அது முக்கியமான விடயப்பொருளைக் கொண்டிருக்கவேண்டும்.

33. ஒரு சட்ட எழுவினா "வழக்கில் அடங்கி"யிருக்கவேண்டுமென்றால், அதற்கு முதலில் வாதுரைகளில் ஓர் அடிப்படையை அமைக்கவேண்டும், மேலும் அவ்வெழுவினா, பொருண்மைசார் நீதிமன்றங்களால் எட்டப்பெற்ற நிலைநிறுத்தத்தக்க பொருண்மை காண்முடிவுகளிலிருந்து வெளிவரவேண்டும் மற்றும் வழக்கில் நியாயமான மற்றும் முறையான முடிவெடுப்பதற்காக அவ்வெழுவினாவைத் தீர்மானிப்பது அவசியமானதாக இருக்கவேண்டும்.

34. இவ்வழக்கில் உள்ளவாறு, அத்தகைய சட்ட எழுவினா அல்லது சட்டம் மற்றும் பொருண்மை கலப்பு எழுவினாவுங்கூட விசாரணை நீதிமன்றம் அல்லது முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் முன்பாக வலியுறுத்தப்படாதவிடத்து, இந்நீதிமன்றத்தால் **பஞ்சகோபால் பரூவா -எதிர்- வினேஷ் சந்திர கோஸ்வாமி**[3] என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டவாறு ஓர் இரண்டாம் மேல்முறையீடு ஏற்றுக்கொள்ளப்பட இயலாது.

35. ஒரு சட்ட எழுவினா முக்கியமான ஒன்றா? என்பதும், அவ்வெழுவினா வழக்கில் அடங்கியுள்ளதா? இல்லையா? என்பதும் ஒவ்வொரு வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளைச் சார்ந்ததாகும். ஒட்டுமொத்த தலையாய பரிசீலனை யாதெனில், எல்லா நிலைகளிலும் நீதி வழங்கும் தவிர்க்கவியலா கடமைக்கும், எந்த வழக்கின் ஆயுளையும் நீட்டிப்பதைத் தவிர்க்கும் விதமான வற்புறுத்தும் தேவைக்கும் இடையேயான நீதி துலாக்கோலை தூக்கிப் பிடிப்பது தேவையாகும். இந்த முன்மொழியுரை, **சந்தோஷ் உறசாரி -எதிர்- புருஷோத்தம் திவாரி**[4] என்ற வழக்கிலிருந்து ஆதரவை நாடுகிறது.

36. ஓர் இரண்டாம் மேல்முறையீட்டில், உயர் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு, முக்கியமான சட்ட எழுவினாவுக்குட்பட்டிருப்பதால், சான்று மதிப்பீடு தவறானது என அறிந்தாலுங்கூட மேலும் சங்கதியின் காண்முடிவு, **இராம்சந்திரா -எதிர்- இராமலிங்கம்**[5] என்ற வழக்கில் தீர்மானிக்கப்பட்டவாறு, சரியானதல்ல என்றாலும் ஒரு சங்கதியின் காண்முடிவினை இரண்டாம் மேல்முறையீட்டில் எதிர்ப்பதற்கான வாய்ப்பில்லை,

---

3. ஏ.ஐ.ஆர். 1997 எஸ்.சி. 1047
4. (2001) 3 எஸ்.சி.சி. 179
5. ஏ.ஐ.ஆர். 1963 எஸ்.சி. 302

உயர் நீதிமன்றம் முன்பாக முதன்முறையாக எழுப்பப்படும் முற்றிலும் புதிய வாதக்கூறு வழக்கின் வேர் வரைக்கும் செல்லவில்லையென்றால், அது வழக்கில் அடங்கியுள்ள எழுவினாவாகாது.

37. இவ்வழக்குக்கு தொடர்புடைய உ.வி.மு.ச., பிரிவு 100-க்கு தொடர்பான கோட்பாடுகள் சுருக்கமாகக் கூறுவதாவது:

(i) ஓர் ஆவணத்தின் வாசகங்களிலிருந்து அல்லது பொருளடக்கத்திலிருந்து எழும் ஒரு சங்கதியின் அனுமானம் என்பது சங்கதியின் எழுவினாவாகும், ஆனால் ஓர் ஆவணத்தின் வரையறைகளின் சட்ட விளைவு என்பது சட்ட எழுவினாவாகும். ஓர் ஆவணத்தைப் பொருள்கொள்ளுதலில் சட்டக் கோட்பாடு ஏதும் செயற்படுத்துவதற்குட்பட்டிருந்தால், அதுவும் சட்டப் பிரச்சினையாகும். ஆகவே, ஓர் ஆவணத்தைத் தவறாகப் பொருள்கொள்ளும்போதும் அல்லது ஓர் ஆவணத்தைப் பொருள்கொள்ளுதலில் சட்டக் கோட்பாட்டினைத் தவறாகப் பொருத்துகிறபோதும், அங்கு சட்ட எழுவினா எழுகிறது.

(ii) ஓர் வழக்கில் முக்கியமான சட்ட எழுவினா அடங்கியுள்ளது, சாதாரணமான சட்ட எழுவினா அல்ல என்று உயர் நீதிமன்றம் மனநிறைவடையவேண்டும். வழக்கின் தீர்முடிவின்போில் (அதாவது ஒரு எழுவினாவுக்கு வழக்குத் தரப்பினர்களின் உரிமைகளைப் பாதிக்கும் வண்ணம் விடை காண்பது) முக்கியமான ஒன்றைக் கொண்டிருக்கும் ஒரு சட்ட வினா ஏதும் குறிப்பிட்ட சட்ட வகையங்களால் உள்ளடக்கப்பட்டிருந்தாலோ அல்லது அறுதியிடப்பட்ட சட்டக் கோட்பாடு கட்டுப்படுத்தும் முன்தீர்ப்புகளிலிருந்து எழுந்தாலோ, மேலும்

விவாதிக்கத்தக்க சட்டப் பிரச்சினை உள்ளடங்கியிருந்தாலோ, அது முக்கியமான சட்ட வினாவாக இருக்கும்.

(iii) வெளிப்படையான சட்ட வகையங்கள் அல்லது கட்டுப்படுத்தும் முன் தீர்ப்புகள் இவற்றில் ஏதோ ஒன்றின் காரணமாக சட்ட நிலை தெளிவாக இருக்குமிடத்து, ஒரு மாறுபட்ட சூழலிலும் ஒரு முக்கியமான சட்ட வினா எழும், ஆனால் கீழமை நீதிமன்றம், அத்தகைய சட்டக் கோட்பாட்டினை பொருட்படுத்தாமலோ அல்லது அதற்கு மாறாக செயல்பட்டோ வழக்கினை முடிவு செய்துள்ளது. இரண்டாம் வகை வழக்குகளில், சட்டம் இன்னமும் விவாதத்திற்குரியதாக உள்ளதால் முக்கியமான சட்ட எழுவினா எழுகிறது என்றாலும், முக்கியமான எழுவினாவின்பேரில் அளிக்கப்படும் தீர்முடிவு, அறுதியிடப்பட்ட சட்ட நிலைப்பாட்டை மீறுவதாலும் அது எழும்.

(iv) பொது விதி என்னவென்றால், உயர் நீதிமன்றம், கீழமை நீதிமன்றங்களின் ஒருங்கியல்வான காண்முடிவுகளில் தலையிடாது என்பதாகும். ஆனால் இதுவொரு முழுமையான விதியல்ல. சில நன்கு அங்கீகரிக்கப்பட்ட விதிவிலக்குகளாவன: (i) கீழமை நீதிமன்றங்கள் முக்கிய சான்றினைப் பொருட்படுத்தாதிருத்தல் அல்லது சான்றேதும் இல்லாமல் அதன்பேரில் செயற்படுதல்; (ii) நீதிமன்றங்கள் பிழைபாடாக சட்டத்தைப் பயன்படுத்தி மெய்ப்பிக்கப்பட்ட சங்கதிகளிலிருந்து தவறான முடிவுகளை எடுத்தல்; அல்லது (iii) நீதிமன்றங்கள், மெய்ப்பிக்கும் கடமையை தவறாகப் பதிப்பது என்பனவாகும். சான்றேதும் இல்லாததன் அடிப்படையிலான ஒரு தீர்முடிவு, ஒட்டுமொத்தமாக சான்றேதும் இல்லாத வழக்குகளை மட்டுமே

குறிப்பிடவில்லையென்றாலும், சான்றினை ஒட்டுமொத்தமாக எடுக்கிறவிடத்து, அது காண்முடிவுக்கு ஆதரவளிக்கும் நியாயமான திறன் பெற்றிருக்காது என்னும் வழக்கினையும் குறிப்பிடுகிறது.

38. உயர் நீதிமன்றத்துக்கு மிகுந்த மதிப்புடன் கூறுவது யாதெனில், உயர் நீதிமன்றத்தால் வனையப்பட்ட இரண்டு எழுவினாக்களுமே முக்கியமான சட்ட எழுவினாவுமல்ல, குறைந்தபட்சம் சட்ட எழுவினாவுமல்ல. ஓர் ஆவணத்தைப் பொருள்கொள்கையில், ஏதும் ஆவணத்தின் சட்டப்படியான செயல்விளைவு அல்லது பொருள்விளக்கம் குறித்தோ, அதாவது அது சட்ட எழுவினாவை எழுப்பக்கூடியது என்பதைக் குறித்தோ உயர் நீதிமன்றம் முன்பாக கருத்து வேறுபாடு ஏதுமில்லை. உயர் நீதிமன்றம் முன்பாக உள்ள எழுவினா, அறுதியிடப்பட்ட சட்டக் கோட்பாடுகளாலோ மற்றும்/அல்லது முன்தீர்ப்புகளாலோ உள்ளடக்கப்படாததால் இது விவாதிக்கத்தக்க வினாவல்ல.

39. ஏதும் முக்கியமான எழுவினாவின்பேரில் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் அளிக்கப்படும் தீர்முடிவு, அறுதியிடப்பட்ட சட்ட எழுவினா எதனையும் மீறிவிட்டது என்பதோ அல்லது முரணானவற்றால் பாதிப்படைந்துவிட்டது என்பதோ எவருடைய வழக்குமல்ல. ஒட்டுமொத்தமாக எடுக்கப்படும் சான்று, முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் காண்முடிவினை, நியாயமானவகையில் ஆதரிப்பதில்லை என்பதோ, முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் பதிவுருச் சான்றினை பொருளற்ற முறையிலோ மற்றும்/அல்லது மனம்போன போக்கிலோ பொருள்விளக்கம் செய்தது என்பதோ எவருடைய வழக்குமல்ல. முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம், ஏதும் அறுதியிடப்பட்ட சட்டக் கோட்பாட்டினைப் பொருட்படுத்தாமலோ அல்லது

அதற்குமாறாக செயல்பட்டோ, அதன் முடிவை எட்டியுள்ளது என்பதும் எவருடைய வழக்குமல்ல.

40. முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் பதிவுரு சான்றினை விரிவாக ஆராய்ந்து, மேல்முறையீட்டாளர்-பிரதிவாதி, வழக்கு வளாகத்தின் ஒரு பகுதியின் உரிமையாளர் என்றும், எதிர்மேல்முறையீட்டாளர்-வாதி, வழக்கு வளாகத்தின் மற்றொரு பகுதியின் உரிமையாளர் என்றும் ஒரு நியாயமான முடிவினை எட்டியது. எதன்மூலம் மேல்முறையீட்டாளர்-பிரதிவாதிக்குரிய மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர்-வாதிக்குரிய உரிமை முன்னவர்கள், வழக்கு வளாகத்தின் மீதான உரிமைமூலத்தைப் பெற்றனரோ, அந்த பதிவு செய்யப்பட்ட உரிமைமாற்ற ஆவணங்கள் உட்பட, நம்பத்தக்கதும் கட்டுப்படுத்துவதுமான உரிமைமூல ஆவணங்களின் அடிப்படையிலானதே இக்காண்முடிவாகும். மெய்ப்பிக்கப்பட்ட சங்கதியிலிருந்து தவறான முடிவு ஏதும் எடுக்கப்படவுமில்லை. மெய்ப்பிக்கும் கடமையும் தவறாக இடமாற்றியமைக்கப்படவுமில்லை.

41. இரண்டாவது சட்ட எழுவினா அதாவது மேலே கருத்துரைக்கப்பட்டு, வாதுரைகள் மற்றும் சான்றின் அடிப்படையில் எதிர்மேல்முறையீட்டாளரான வாதி சார்பாக முடிவு செய்யப்பட்டுள்ளவாறு, வாதி, பாதி வழக்குச் சொத்து தொடர்பான உரிமைமூல விளம்புகைக்கு உரிமையானவர் என முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்தது சரியா? என்ற எழுவினாவாகும். வழக்குச் சொத்தில் எதிர்மேல்முறையீட்டாளர் வாதியின் பாதி பங்கு குறித்த விளம்புகைக்கு அவருடைய தகுதிப்பாடு குறித்த முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் முடிவு, இரண்டாம் மேல்முறையீட்டில் தலையீட்டைக் கோரவில்லை.

42. உயர் நீதிமன்றத்தால் வனையப்பட்ட முதல் எழுவினா அதாவது, முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் வழங்கியிருக்காத, இடைக்கால வருமானங்களை எதிர்மேல்முறையீட்டாளரான வாதிக்கு மேல்முறையீட்டு நீதிமன்றம் வழங்கியிருந்தது என்பது தவறான அனுமான சங்கதிகளின் அடிப்படையிலானது எனும்போது கீழமை நீதிமன்றம்/மேல்முறையீட்டு நீதிமன்றம், சுவாதீனப் பரிகாரத்தை எதிர்மேல்முறையீட்டாளர்-வாதிக்கு மறுத்தது சரியா? என்னும் எழுவினாவாகும்.

43. முதல் எழுவினா என்னும் முக்கியமான சட்ட எழுவினாவோ, குறைந்தபட்சம் சட்ட எழுவினாவோ வழக்கில் அடங்கியில்லை. உயர் நீதிமன்றம் தீர்மானித்ததாவது:-

> "8. முக்கியமான சட்ட எழுவினா எண் 1:-
>
> வழக்குரை அட்டவணைச் சொத்து தொடர்பாக ஒரு பாதி உரிமையை விளம்புகை செய்தபிறகு, பிரதிவாதிகள் சொத்தின் (பி.சா.ஆ.9 முதல் ஆ.32) சுவாதீனத்திலும், அனுபோகத்திலும் உள்ளனர் என்று காண்பிக்க அவர்கள் ஆவணங்களை முன்னிலைப்படுத்தவில்லை என்ற காரணத்தின்பேரில் சுவாதீனத்தை மீளப்பெறுவதற்கான பரிகாரத்தை கற்றறிந்த முதல் மேல்முறையீட்டு நீதிபதி மறுத்துள்ளார். வழக்குரை பட்டியல் சொத்து முழுவதையும் பொறுத்தவரை, பிரதிவாதி எதிர்நிலை உடைமை வாயிலாக நீடனுபோக உரிமைமூலத்தைப் பெற்றதாக பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் வாதுரைகள் ஏதுமில்லை. வழக்குச் சொத்து தொடர்பான சுவாதீனத்தை மீளப்பெற்று ஒப்படைக்கும் பரிகாரத்தை ஓர் இடத்தில் நிராகரித்துள்ள

கற்றறிந்த முதல் மேல்முறையீட்டு நீதிபதி, உரிமை வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னதாக மூன்று ஆண்டுகளுக்கு இடைக்கால வருமானத்தை வழங்கியுள்ளார். மேற்சொன்ன காண்முடிவுகள் இரண்டும் ஒன்றுக்கொன்று முற்றிலும் முரணாக உள்ளன. சுவாதீனம் மீளப்பெறுதல் ஒருமுறை மறுக்கப்பட்டுவிட்டால், பிறகு இடைக்கால வருமானம் ஏதும் வழங்குதல் குறித்த வினா இருக்காது. வழக்குரை அட்டவணைச் சொத்தில் ஒரு பாதி உரிமையை வாதிக்கு ஆதரவாக விளம்புகை செய்தபிறகு, கற்றறிந்த மேல்முறையீட்டு நீதிபதி, வழக்குரை அட்டவணைச் சொத்தில் ஒரு பாதி பங்கினைப் பொறுத்தும் சுவாதீனம் மீளப்பெறுதலை வழங்கியிருக்கவேண்டும். வாதிக்கும் பிரதிவாதிக்குமிடையே உரிமையாளர்-வாடகைதாரர் என்ற உறவுமுறை ஏதுமில்லையென இரு கீழமை நீதிமன்றங்களும் ஒருமித்து தீர்மானித்துள்ளன. அத்தகைய சூழ்நிலைகளில் இவ்வழக்கில் இடைக்கால வருமானம் குறித்த வினா ஏதும் எழவில்லை. வழக்குரை அட்டவணைச் சொத்தின் பாதி பகுதி தொடர்பாக சுவாதீனத்தை மீளப்பெறுதல் பரிகாரம் கற்றறிந்த முதல் மேல்முறையீட்டு நீதிபதி அவர்களால் மறுக்கப்பட்டதைப் பொறுத்தளவில், இந்நீதிமன்றத்திலிருந்து தலையீட்டைக் கோருகிறது. அதன்படி முக்கியமான சட்ட எழுவினா எண் *1* பதிலளிக்கப்படுகிறது.

9. முடிவில், இரண்டாம் மேல்முறையீடு எண் 558/2000 அனுமதிக்கப்படுகிறது மற்றும் வழக்குரை அட்டவணைச் சொத்தின் ஒரு பகுதி தொடர்பான சுவாதீனம் மீளப்பெறுதலுக்கான உரிமை வழக்கின் தள்ளுபடியைப் பொறுத்தவரையில், கும்பகோணம், சார்பு நீதிமன்றக் கோப்பிலுள்ள மே.வ.எண் 16/1998-இல் கற்றறிந்த முதல் மேல்முறையீட்டு நீதிபதியின் தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரை நீக்கறவு செய்யப்படுகிறது. தீர்ப்பாணையை நிறைவேற்றும் சமயத்தில் வழக்குரைஞர் ஆணையரின் உதவியுடன் வழக்குரை அட்டவணைச் சொத்தின் பாதியை அடையாளங்கண்ட பிறகு, அதனை மீளப்பெறுவதற்கு வாதி உரிமையுடையவராவார். மற்றதைப் பொறுத்தவரையில், கும்பகோணம், சார்பு நீதிமன்றக் கோப்பிலுள்ள மே.வ. எண் 16/1998-இல் கற்றறிந்த முதல் மேல்முறையீட்டு நீதிபதியின் தீர்ப்பாணை இதன்மூலம் உறுதிசெய்யப்படுகிறது. இரண்டாம் மேல்முறையீடு எண் 64/2000 தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகையில்லை. அதன்விளைவாக தொடர்புடைய பல்வகை மனு முடிக்கப்படுகிறது."

44. வழக்குச் சொத்தின் சுவாதீன ஒப்படைப்புப் பரிகாரத்தை எதிர்மேல்முறையீட்டாளர்-வாதிக்கு முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் அதன் காண்முடிவுகளில் மறுத்துவிட்டது, ஆனால், எதிர்மேல்முறையீட்டாளர்-வாதிக்கு உரிமை வழக்கு தாக்கல் செய்வதற்கு முந்தைய மூன்றாண்டுகளுக்கு இடைக்கால வருமானம் வழங்கியிருந்தது, அதில் முரண்பாடிருந்தது என்ற முடிவில் மிகு மாண்புக்குரிய உயர் நீதிமன்றம் வெளிப்படையாகவே பிழைபுரிந்துள்ளது.

45. 'இடைக்கால வருமானங்கள்' என்பது சொத்தின் தவறான சுவாதீனத்திலிருந்து பெறப்படக்கூடிய வருமானங்களாகும், ஆனால் அது மேம்பாடுகளின் காரணமாக பெறப்படும் வருமானங்களை உள்ளடக்காது. மேல்முறையீட்டாளர்-பிரதிவாதி, வழக்கு வளாகத்தின் எந்தப் பகுதியிலும் தவறான சுவாதீனத்திலிருந்ததாக விசாரணை நீதிமன்றத்தாலோ அல்லது முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தாலோ எதுவும் கண்டறியப்படவில்லை. முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் எவ்விடத்திலும் 'இடைக்கால வருமானம்' என்ற சொற்றொடரைப் பயன்படுத்தவில்லை. உயர் நீதிமன்றம், எதிர்மேல்முறையீட்டாளர்-வாதிக்கு என்ன வழங்கியதோ, அது, வழக்கு வளாகத்தில் எதிர்மேல்முறையீட்டாளர்-வாதியின் பகுதியினைப் பயன்படுத்துதல், கையுடைமை மற்றும் அனுபோகம் ஆகியவற்றின் மூலம் மேல்முறையீட்டாளரால் பெறப்பட்ட வருமானத்தைத் திருப்பிக்கொடுக்கும் தன்மையில் மற்றும்/அல்லது அதாவது வழக்கு வளாகத்தின் மேற்படி பகுதியிலிருந்து கிடைக்கும் வருமானத்தை அல்லது அதனுடைய பயன்பாடு, கையுடைமை மற்றும் அனுபோகம் ஆகியவற்றிற்கான கட்டணங்களை திருப்பிச் செலுத்துவதாக இருந்தது.

46. சுவாதீனத் தீர்ப்பாணை, சொத்தின் மீதான உரிமைமூல விளம்புகை மற்றும் உடைமையுரிமை குறித்த தீர்ப்பாணையை தானாகவே தொடராது. பிரதிவாதியின் அசல் சுவாதீனம் அனுமதிக்கத்தக்கது என்பதை வாதி நிலைநாட்ட விரும்புகிறவிடத்து, இச்சாட்டுரையை மெய்ப்பிக்கவேண்டியது வாதியேயாவார் மற்றும் அவர் அவ்வாறு செய்ய தவறுகிறவிடத்து, அதற்கு முரணாக சான்றேதும் இருந்தாலன்றி, அந்த சுவாதீனம் எதிர்நிலையானதென அனுமானிக்கலாம்.

47. வழக்குச் சொத்துக்கு எதிர்மேல்முறையீட்டாளர்-வாதியின் உரிமைமூலம் மற்றும் உடைமையுரிமையை, மேல்முறையீட்டாளர்-பிரதிவாதி உரிமை வழக்கில் தனது எதிர்வழக்குரையில் மறுத்துள்ளார். மேல்முறையீட்டாளர்-பிரதிவாதி வழக்குச் சொத்தின் உரிமையாளராவார், மேலும் அவர் ஆரம்பத்திலிருந்தே உரிமையாளராக வழக்கு வளாகத்தின் சுவாதீனத்திலும், கையுடைமையிலும் இருந்துள்ளதாக மேல்முறையீட்டாளர்-பிரதிவாதி உறுதிசெய்துள்ளார்.

48. எங்களது ஆழ்ந்தாராய்ந்த கருத்தின்படி, ஏ.ஐ.ஆர். 1939 பி.சி. 201-இல் அறிக்கையிடப்பட்ட **பாபா கர்தார் சிங் -எதிர்- தயாள் தாஸ்** என்ற வழக்கில் அரசப் பேரவையால் எடுத்துரைக்கப்பட்டவாறு, பரிகாரங்களைக் கோரும் வாதியின் கோரிக்கையானது, வாதியின் வழக்கின் அடிப்படையில் முடிவு செய்யப்படவேண்டுமேயன்றி, எதிராளியின் வழக்கிலுள்ள ஏதேனும் பலவீனமானவற்றின் பேரில்ல்ல என்று நன்கு நிலைநிறுத்தப்பட்ட கோட்பாட்டை பொருட்படுத்தாது, எதிர்நிலை சுவாதீனம் குறித்து மேல்முறையீட்டாளர்-பிரதிவாதி எதிர்வாதஞ்செய்யவில்லை என்ற காரணத்தின்பேரில் எதிர்மேல்முறையீட்டாளர்-வாதிக்கு சுவாதீனத்தை அனுமதிக்க முற்பட்டதில் உயர் நீதிமன்றம் சட்டப்படி பிழைபுரிந்துவிட்டது என்பதாகும்.

49. மேல்முறையீட்டாளர்-பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட வாதுரைகளிலிருந்து, மேல்முறையீட்டாளர்-பிரதிவாதி, சுமார் 75 ஆண்டுகளுக்கு முன்னால் நிறைவேற்றப்பட்ட உரிமைமாற்ற ஆவணத்தின் அடிப்படையில் வழக்குச் சொத்தின் உடைமையுரிமையினைக் கோரினார் என்பது தெள்ளத்தெளிவாகிறது.

மேல்முறையீட்டாளர்-பிரதிவாதி, தனது தந்தையால் நிறைவேற்றப்பட்ட உடைமை உரிமைவிடுப்பு ஆவணத்தின் அடிப்படையில் 1966-ஆம் ஆண்டு முதல் தொடர் சுவாதீனத்தைக் கோரியுள்ளார். அதாவது, மேல்முறையீட்டாளர்-பிரதிவாதி உரிமை வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக சுமார் 28 ஆண்டுகள் உரிமையாளராக வழக்கு வளாகத்தின் சுவாதீனத்தில் இருந்துவந்ததாகக் கூறியுள்ளார்.

50. இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின்படி பார்த்தால், மேல்முறையீட்டாளர்-பிரதிவாதி, வழக்குச் சொத்தின் ஒரு பகுதிக்குத்தான் உரிமையாளர் என்றாலும், அவர் முழுச்சொத்தின் சுவாதீனத்திலிருந்து வந்தார் என்பதை மறுப்பதற்கில்லை, மேலும் மேல்முறையீட்டாளர்-பிரதிவாதி, உரிமையாளராக பல ஆண்டுகளாக தொடர்ந்து சுவாதீனத்திலிருந்து வந்ததாக தனது எதிர்வழக்குரையில் கூறியுள்ளார், எதிர்நிலை சுவாதீனம் வழியான உடைமையுரிமை தெளிவாக வாதுரைக்கப்பட்டிருக்கவில்லையென்றாலுங்கூட, எதிர்வழக்குரையில் மேல்முறையீட்டாளரின் எதிர்வாதம் மிகவும் முக்கியமானதான எதிர்நிலை சுவாதீனம் குறித்தே இருந்தது. எனினும், மேல்முறையீட்டாளர்-பிரதிவாதி எதிர்நிலை சுவாதீனம் மூலம் உரிமைமூலம் கோர உரிமையுடையவரா? இல்லையா என்ற வினாவை ஆராய்வது இந்நீதிமன்றத்திற்கு அவசியமில்லை.

51. சுவாதீனத் தீர்ப்பாணை கோரும் நபர், அச்சுவாதீனத்தைப் பெறுவதற்கு அவரது தகுதிப்பாட்டை நிறுவவேண்டும், மேலும் அவரது கோரிக்கை, காலவரையறை சட்டங்களால் தடைசெய்யப்படவில்லை என்பதையும் நிறுவிக்காட்டவேண்டும். அவர் சாட்டுரைத்த அத்துமீறியவர் சுவாதீனத்தை பெறுவதற்கு முன்பாகவே தான் சுவாதீனத்தைப் பெற்றிருந்தார் என்பதைக் காண்பிக்கவேண்டும்.

52. "உரிமைமூலத்தைத் தொடர்ந்துவரும் சுவாதீனம்" என்னும் முதுமொழி, சொத்துக்கு அதன் பொருந்துகையைப் பொறுத்து வரையறுக்கப்பட்டுள்ளது, அதன் தன்மையைப் பொறுத்தவரை, அது அனைவரும் சென்றுவரும் திறந்தவெளியிடங்கள் வகையில், உண்மையான மற்றும் தனித்துவமான கையுடைமைக்கு அனுமதிக்காது. எவரும் சுவாதீனத்தை உறுதியாக மெய்ப்பிக்காதபோது மட்டுமே உரிமைமூலத்தை தொடர்ந்து சுவாதீனம் வருவதாக கருதப்படவேண்டும் என்ற அனுமானம் எழுகிறது. இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர்-பிரதிவாதி தான் சுவாதீனத்திலுள்ளாரேயொழிய எதிர்மேல்முறையீட்டாளர்-வாதி அல்ல என ஒப்புக்கொள்ளப்படுகிறது.

53. அசையாச் சொத்தின் சுவாதீன மீளப்பெறுதலுக்கான ஓர் உரிமை வழக்கு, 1963-ஆம் ஆண்டு காலவரையறைச் சட்டத்தால் கட்டுப்படுத்தப்படுகிறது. காலவரையறைச் சட்டத்தின் பிரிவு 3, அச்சட்டத்தில் வகுத்துரைக்கப்பட்ட வரையறை காலம் காலாவதியான பிறகு, உரிமை வழக்கு எதனையும் தாக்கல் செய்வதைத் தடைசெய்கிறது. எதிர்வாதத்தில், காலவரையறை என்ற வாதம் எடுக்கப்பட்டிருக்காவிட்டாலுங்கூட வரையறை காலம் காலாவதியான பிறகு, தாக்கல் செய்யப்பட்ட உரிமை வழக்கைத் தள்ளுபடி செய்வதற்கு நீதிமன்றம் கடமைப்பட்டுள்ளது.

54. அசையாச் சொத்தை மீளப்பெறுவதற்கான உரிமை வழக்குகளுக்கான வரையறை காலம், காலவரையறைச் சட்டத்திற்குரிய அட்டவணையின் பகுதி V-இல் வகுத்துரைக்கப்பட்டுள்ளது, மேலும் அதில் குறிப்பாக வகுமுறைக்கூறுகள் 64 மற்றும் 65, வசதிக்காக இதன்கீழ் கொடுக்கப்பட்டுள்ளன:-

பகுதி V. - அசையாச் சொத்து தொடர்பான உரிமை வழக்குகள்

சொத்து விவரம்	வரையறை காலம்	வரையறைக் காலம் எப்போதிலிருந்து தொடங்குகிறது
64. உரிமைமூலத்தின்பேரிலல்லாமல் முந்தைய சுவாதீனத்தின் அடிப்படையில், சொத்தின் கூவாதீனத்தில் வாதி இருக்கும்போது அவரை வெளியேற்றி சுவாதீனம் பெறுவதற்காக	பன்னிரெண்டு ஆண்டுகள்	சுவாதீனத்திலிருந்து வெளியேற்றும் நாள்
65. உரிமை மூலத்தின் அடிப்படையில் அசையாச் சொத்தின் சுவாதீனத்திற்கும் அல்லது அதிலுள்ள பாத்தியதை எதற்கும்	பன்னிரெண்டு ஆண்டுகள்	பிரதிவாதியின் சுவாதீனம் வாதிக்கு எதிர்நிலை ஆகிறபோது
அ) எஞ்சுரிமையாளர், பின்னடைவுரிமையர் (உரிமையாளர் அல்லாதவர்) அல்லது உயில்வழி உரிமை பெறுபவர் ஆகியோரால் உரிமை வழக்கு தாக்கல் செய்யப்படுமிடத்து, எஞ்சுரிமையாளர், பின்னடையுரிமையர் அல்லது உயில்வழி உரிமைபெறுபவர் ஆகியோரின் சொத்து நேர்வுக்கேற்ப சுவாதீனத்திற்குள் வருகிறபோதுதான் பிரதிவாதியின் சுவாதீனம் எதிர்நிலையாகிவிட்டதாகக் கருதப்படுதல்வேண்டும்.		
ஆ) ஓர் இந்து அல்லது முஸ்லீம் பெண்ணின் இறப்பின்பேரில் அசையாச் சொத்தின் சுவாதீனத்துக்கு உரிமையான ஓர் இந்து அல்லது முஸ்லீம் பெண் உரிமை வழக்கு தாக்கல் செய்யுமிடத்து, அப்பெண் இறக்கிறபோதுதான் பிரதிவாதியின் சுவாதீனம் எதிர்நிலையாகிவிட்டதாகக் கருதப்படுதல்வேண்டும்.		
இ) விற்பனை நாளன்று தீர்ப்புக் கடனாளி சுவாதீனத்துக்கு வெளியில் இருந்தார் எனும்போது, தீர்ப்பாணையை நிறைவேற்றும்வகையில் விற்பனையில் உள்ள விலைக்கு வாங்கியவரால் உரிமை வழக்கு தாக்கல் செய்யப்படுமிடத்து, சுவாதீனத்துக்கு வெளியில் இருந்தவரான தீர்ப்புக் கடனாளியின் சார்பாளராக விலைக்கு வாங்கியவர் கருதப்படுதல்வேண்டும்		

55. மேல்முறையீட்டாளர்-பிரதிவாதி மற்றும்/அல்லது அவரது உரிமை முன்னவர் வழக்குச் சொத்தின் சுவாதீனத்தை எந்த தேதியிலிருந்து எடுத்துக்கொண்டார்

என்பது குறித்து வழக்குரையில் எந்தவொரு மறைகூற்றும் இல்லாதநிலையிலும், சுவாதீனத்துக்கான தீர்ப்பாணைப் பரிகாரம் காலவரம்புக்குள் இருந்தது என்று காண்பிக்க எந்தவொரு மறைகூற்றும் இல்லாதநிலையிலும், இன்னும் சொல்லப்போனால், மேல்முறையீட்டாளர்-பிரதிவாதியின் தந்தையார், மேல்முறையீட்டாளர்-பிரதிவாதிக்கு ஆதரவாக உரிமைவிடுப்பு ஆவணத்தை நிறைவேற்றியபோதான 1966-ஆம் ஆண்டு முதற்கொண்டு மற்றும்/அல்லது அதாவது உரிமை வழக்கு தாக்கல் செய்த நாளது தேதிவரையில் சுமார் 28 ஆண்டுகளாக முழுமையான உரிமைகளுடன் உரிமையாளராக வழக்கு வளாகத்தின் முழுமையான சுவாதீனத்தில் இருந்துவந்ததாக மேல்முறையீட்டாளர்-பிரதிவாதி வாதுரைத்துள்ளபோதும், உயர் நீதிமன்றம், முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் காண்முடிவினை எதிர்மறையாக்கி, எதிர்மேல்முறையீட்டாளர்-வாதியின் சுவாதீனத்தை மீளப்பெறுதல் பரிகாரத்தை அனுமதித்திருக்கக்கூடாது.

56. (1907) பி.சி.73-இல் அறிக்கையிடப்பட்ட **பெரி -எதிர்- கிரிஸ்டோறால்ட்** என்ற வழக்கில் அரசப்பேரவையால் தீர்மானிக்கப்பட்டவாறு, நிலத்தின் சுவாதீனத்திலுள்ள நபரொருவர், உரிமையாளர் என்று அனுமானிக்கப்படும் தன்மையினைக்கொண்டு, சாதாரண உடைமையுரிமைகளை அமைதியான முறையில் செயல்பட்டு, அனைத்து விதத்திலும் முற்றிலும் நிறைவான உரிமைமூலத்தை பெற்றிருப்பாரேயானால் அதனை எதிர்த்துரைக்கவியலாது, ஆனால் உரிமைகொண்ட உரிமையாளருக்கோ ..... மேலும் உரிமைப்படியான உரிமையாளர், காலவரையறைச் சட்ட வகையங்களால் வகுத்துரைக்கப்பட்ட வழக்குக்கு பொருந்தத்தக்க காலத்திற்குள், சட்டப்படியாக தனது சுவாதீன உரிமையை உறுதிப்படுத்த முன்வரவில்லையென்றால், அவரது உரிமை என்றென்றைக்கும்

வேறுபடுத்திக்காட்டத்தக்கது மற்றும் சுவாதீன உரிமையாளர் முழுமையான உரிமைமூலத்தைப் பெற்றுவிடுகிறார்.

57. ஓர் இரண்டாம் மேல்முறையீட்டை ஏற்றுக்கொண்டு, முடிவு செய்வதற்கான முன்நிபந்தனையானது, முக்கியமான சட்ட எழுவினா உளதாயிருப்பது என்பதால், எப்போதெல்லாம் உயர் நீதிமன்றத்தால் ஓர் எழுவினா வனையப்படுகிறதோ, அப்பொழுதெல்லாம் உயர் நீதிமன்றம், அவ்வெழுவினா சட்டத்தில் ஒன்றே தவிர, சங்கதிகளின் எழுவினா என்பதேயல்ல என்பதைக் காண்பிக்கவேண்டும், அவ்வெழுவினா முக்கியமான எழுவினா என்பதையும் அது காண்பிக்கவேண்டும்.

58. **கொண்டிப தகடு கடாம் -எதிர்- சாவித்ரிபாய் சோபன் குஜார்**[6] என்ற வழக்கில், இந்நீதிமன்றம் தீர்மானித்ததாவது:

> "ஒரு வழக்கில் முக்கியமான சட்ட எழுவினா அடங்கியிருந்தால் மட்டுமே திருத்தத்திற்குப் பிறகான ஓர் இரண்டாம் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட முடியும். மேல்முறையீட்டு விவரக் குறிப்பு, உள்ளடங்கியுள்ள முக்கியமான சட்ட எழுவினாவைத் துல்லியமாகத் தெரிவிக்கவேண்டும். மேலும், அத்தகையதொரு எழுவினா உள்ளது குறித்து உயர் நீதிமன்றம் தனக்குத்தானே மனநிறைவடைந்துகொள்ளும் கடமை கொண்டுள்ளது. உயர் நீதிமன்றம் மனநிறைவடைந்துவிட்டால், வழக்கில் அடங்கியுள்ள முக்கியமான சட்ட எழுவினாவை முறைப்படுத்திக்கூறவேண்டும்.

---

6. (1999) 3 எஸ்.சி.சி. 722

அவ்வாறு முறைப்படுத்திக்கூறப்பட்ட எழுவினாவின்பேரில் மேல்முறையீடு கேட்கப்படவேண்டியதாகிறது. எனினும், மேல்முறையீட்டைக்கேட்கும் சமயத்தில், நீதிமன்றத்திலுள்ள வழக்கில் முக்கியமான சட்ட வினா ஏதும் அடங்கியில்லை என்று வாதிடுவதற்கு எதிர்மேல்முறையீட்டாளர் உரிமைகொண்டுள்ளார். முக்கியமான சட்ட எழுவினா, அனுமதி சமயத்தில் தவறுதலினாலோ அல்லது கவனக்குறைவினாலோ முறைப்படுத்திக்கூறப்படாதவிடத்து, அநீதி ஏதும் வழக்காடிக்கு இழைக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் உயர் நீதிமன்றத்தால் முறைப்படுத்திக்கூறப்படாதபோதிலும், முக்கியமான சட்டக்கூறின்பேரில் மேல்முறையீட்டினைக் கேட்புகை செய்யும் அதன் அதிகாரங்களைக் குறித்து பிரிவுக்கான வரம்புரை தெரிவிக்கிறது."

"மேல்முறையீட்டு விவரக் குறிப்பில் அத்தகையதொரு முக்கியமான சட்ட எழுவினா குறித்த விவரத்தை வற்புறுத்தாமலும், அனுமதிக்கும் சமயத்தில் அதனை முறைப்படுத்திக்கூறாமலும், உயர் நீதிமன்றங்கள் அறிவிப்புகளை அனுப்பி, பொதுவாக உரிமையியல் விசாரணைமுறைச் சட்டத்தின் பிரிவு 100-இன் கீழ் வகுத்துரைக்கப்பட்டுள்ள நடைமுறையைப் பின்பற்றாமல் இரண்டாம் மேல்முறையீடுகளை முடிவு செய்திருக்கின்றன என்பது பலமுறை கண்டறியப்பட்டுள்ளது. மேலும் ஒரு சட்ட எழுவினாவுக்கும், முக்கிய சட்ட எழுவினாவுக்கும் இடையேயான வேறுபாட்டை காட்ட பல

வழக்குகளில் முயற்சி ஏதும் செய்யப்படவில்லை என்றும் கண்டறியப்பட்டுள்ளது. இப்பிரிவின் கீழ் அதிகாரங்களைச் செயலுறுத்தும்வகையில், முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் சங்கதி காண்முடிவுகள் பூசலுக்குரியனவாகக் கண்டறியப்பட்டுள்ளன. மேல்முறையீட்டு உரிமை என்பது இயல்பானதுமல்ல, வழக்குடன் இணைந்த உள்ளுறை உரிமையுமல்ல என்பதை மனதிற்கொள்ளவேண்டும். இது ஓர் உறுதியான சட்ட உரிமையாதலால், தொடர்புடைய சமயத்தில் அமலிலுள்ள சட்டத்திற்குட்பட்டு அது ஒழுங்குபடுத்தப்படவேண்டும். ஓர் இரண்டாம் மேல்முறையீடு நிலைநிறுத்தப்படுவதற்கு முன்பாக, இப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் கண்டிப்பாக நிறைவுசெய்யப்படவேண்டும் மற்றும் எந்த நீதிமன்றத்துக்கும் அக்காரணங்களைச் சேர்க்கவோ அல்லது விரிவுப்படுத்தவோ அதிகாரம் ஏதுமில்லை. இரண்டாம் மேல்முறையீடு, வெறும் நேர்மையான காரணங்களின்பேரில் மட்டுமே முடிவெடுக்கப்பட இயலாது. எவ்வாறாயினும், சங்கதிகளின் ஒருங்கியல்வான காண்முடிவுகள் பிழையானதாக இருந்தாலும் இப்பிரிவின் கீழ் அதிகாரங்களைச் செயலுறுத்தும்வகையில் உயர் நீதிமன்றத்தால் தலையீடு செய்யப்படவியலாது. முக்கியமான சட்ட எழுவினா, முக்கியமான சங்கதி எழுவினாவிலிருந்து வேறுபடுத்திக் காட்டப்படவேண்டும்."

"முக்கியமான எழுவினாவாக குறிப்பிடப்படும் சட்ட எழுவினா, சம்பந்தப்பட்ட உயர் நீதிமன்ற பேரமர்வாலோ அல்லது இங்கிலாந்து அரசப் பேரவையாலோ அல்லது கூட்டரசு அமைப்பு நீதிமன்றத்தாலோ அல்லது உச்ச நீதிமன்றத்தாலோ ஏற்கெனவே தீர்வுசெய்யப்பட்டிருக்குமானால், வழக்கின் சங்கதிகளின்பேரிலான அதன் தவறான செயல்பாடு மட்டுமே முக்கியமான சட்ட எழுவினாவாகச் சொல்லப்படாது. ஒரு சட்டக்கூறு வாதுரைக்கப்பட்டிருக்கவில்லை என்றாலோ அல்லது முறைப்படியான சங்கதி ஏதும் இல்லாதநிலையில், தரப்பினர்களுக்கிடையே எழுந்துள்ளதாகக் கண்டறியப்பட்டாலோ, ஒரு வழக்காடி இரண்டாம் மேல்முறையீட்டில் அவ்வெழுவினாவை முக்கியமான சட்ட எழுவினாவாக எழுப்புவதற்கு அனுமதிக்கப்படக்கூடாது. சங்கதிகளை மட்டும் மதிப்பீடு செய்தல், ஆவணச் சான்று அல்லது பதிவுக்குறிப்புகளின் பொருள் மற்றும் ஆவணங்களின் பொருளடக்கம் ஆகியவை முக்கியமான சட்ட எழுவினாவை எழுப்புவதாக தீர்மானிக்கப்படவியலாது. ஆனால், முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம், அதனிடம் அடைவுற்றிராத அனுமானமான அதிகாரவரம்பு கொண்டுள்ளதாகக் கண்டறியப்படுமிடத்து, அதனை ஒரு முக்கியமான சட்ட எழுவினாவாக கருதி, இரண்டாம் மேல்முறையீட்டில் அது தீர்ப்புக்கூறலாம். முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் நீதியமுறையில் அதன் விருப்புரிமையைச் செயலுறுத்தியுள்ளதாகக்

காட்டப்படுமிடத்து, சட்டப்படியோ அல்லது இரண்டாம் மேல்முறையீட்டில் தலையீட்டைக் கோரும் நடைமுறைப்படியோ அதை ஒரு தவறாக சொல்லமுடியாது."

59. முக்கியமான சட்ட எழுவினா ஏதும் முறைப்படுத்திக் கூறப்படாமல், ஓர் இரண்டாம் மேல்முறையீடு உயர் நீதிமன்றத்தால் தீர்வு செய்யப்படுகிறபோது, **பிஸ்வநாத் கோஷ் -எதிர்- கோபிந்த கோஸ்**[7] என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டவாறு உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரை சட்டப்படி பாதிப்புக்குள்ளானது என்பதாகும். முக்கியமான சட்ட எழுவினாவை முறைப்படுத்திக்கூறுதல் கட்டாயமானது, மேலும் இரண்டாம் மேல்முறையீட்டின் விவரக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள காரணத்தைக் குறிப்பிடுதல் மட்டுமே, உ.வி.மு.ச., பிரிவு 100-இன் வலியுறுத்துக்கூறை நிறைவுசெய்யவியலாது.

60. மேல்முறையீட்டின் கீழுள்ள உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையும், உத்தரவும் வழக்கில் அடங்கியுள்ள எந்த ஒரு சட்ட எழுவினாவையும் விவாதிக்கவோ அல்லது தீர்வு செய்யவோவில்லை, முக்கியமான சட்ட எழுவினா குறித்தும் பேசவுமில்லை.

61. ஒரு வழக்கில் முக்கியமான சட்ட எழுவினா எதுவும் அடங்கியில்லை என்று பதிவுசெய்து, காரணவிளக்கமற்ற உத்தரவுடன் ஓர் இரண்டாம் மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்யும் வழக்கத்தினை விட்டுவிடவேண்டுமென்று இந்நீதிமன்றம் பலமுறை கேட்டுக்கொண்டாலும், உயர் நீதிமன்றமும், சட்ட எழுவினா குறித்து விவாதிக்காமல் இரண்டாம் மேல்முறையீட்டை அனுமதிக்க இயலாது என்றபோதிலும், உயர் நீதிமன்றம் அதைச் செய்துள்ளது.

---

7. ஏ.ஐ.ஆர். 2014 எஸ்.சி. 152

62. மேலே விவாதிக்கப்பட்ட காரணங்களுக்காக மேல்முறையீடுகள் அனுமதிக்கப்படுகின்றன. இரண்டாம் மேல்முறையீடு எண் *558/2000* அனுமதிக்கப்பட்டுள்ளது என்றபடிக்கு மேல்முறையீட்டின் கீழுள்ள உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையும், உத்தரவும் நீக்கறவு செய்யப்படுகிறது மற்றும் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புரையும், தீர்ப்பாணையும் மீட்டளிக்கப்படுகிறது.

மாண்புமிகு நீதியரசர் திரு. நவீன் சின்உறா

மாண்புமிகு நீதியரசர் இந்திரா பானர்ஜி

புது தில்லி,
27.08.2020.

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."